# விளம்பரம் VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 13 AUGUST 01, 2003 பாலம் 15




வீடு விற்க,வாங்க...

**Raja M. Mahendran, P. Eng.**
(Vice president/Sales Rep.)

HOMELIFE HIGHER STANDARDS

எமது நிறுவனத்தில் தொழில் புரிய வீட்டு, வியாபார பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

**Direct: 416.315-9397**
**OFFICE: 416.321-6969**

First Canadian Place

'Skyscraper' என்றால் என்ன?

ஒருகட்டிடத்தின் உயரம் 35m விட உயரமாக இருந்தால் அதை கட்டிடத்தின் Skyscraper எனக் கூறப்படும். சில

| கட்டடங்களின் | உயரம் |
|---|---|
| First Canadian Place | 298.1m |
| Scotia Plaza | 274.9m |
| Canada Trust Tour | 263 |
| Commerce Court | 239.0m |
| TD Tour | 222.8m |

| நகரம் | சனத்தொகை | கட்டிடம் |
|---|---|---|
| ரொறொன்ரோ | 2,481,494 | 1560 |
| மொன்றியல் | 1,812,723 | 272 |
| கல்ஹரி | 878,866 | 170 |
| ஓட்டாவா | 774,072 | 108 |
| மிசிசாகா | 612,925 | 196 |

www.skyscrapers.com

## உலகில் முதலிடத்தில் நோர்வே, கனடா எங்கே?

ஸ்கன்டினேவியன் நாடுகளில் ஒன்றான நோர்வே, 2003இல் உலகில் மக்கள் வாழ்வதற்கு சிறந்த நாடாக ஐக்கிய நாடுகள் சபையினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. உலகில் முதலிடத் தில் சில காலங்களாக இருந்த கனடா இம்முறை அமெரிக்காவிற்கு பின்பாக ஒரு இடம் சென்று எட்டாவது இடத்தை அடைந்துள்ளது. ஐக்கியநாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 175 நாடுகளிற்கு இடையில் எந்த நாடு வாழ்வதற்கு அதிசிறந்தது என்பதனை பல காரணிகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. இவற்றில் முக்கியமாக கருதுபவை: நாட்டிற்குரிய ஆயுட்காலம், படிப்புத்திறமை, மக்களின் ஆரோக்கியத் தன்மை மற்றும் மக்களின் பொருளாதார நிலைமை ஆகும்.

பெண்களிற்கும் தனியான சில காரணிகளும் கணக்கில் எடுக்கப்படுகின்றன. ஏழுவருடங்களாக தொடர்ந்து முதலா வது இடத்தில் இருந்து வந்த கனடா, 2001ஆம் ஆண்டுடன் தனது முதலிடத்தை இழந்தது கவலைக்குரிய விடயமாகும்.

உலகில் சனத்தொகையில் முதல் இரு இடங்களையும் வகிக்கும் சீனா, இந்தியா இந்தக்கணிப்பில் 104, 127வது இடங்களில் இருக்கின்றன. முதல் பத்து இடங்களிலுள்ள நாடுகள் முறையே நோர்வே, ஐஸ்லாந்து, சுவீடன், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, பெல்ஜியம், அமெரிக்கா, கனடா, ஜப்பான், சுவிஸ்லாந்து மற்றும் டென்மார்க்.

இதற்கு எதிர்மாறாக கடைசியிலுள்ள பத்து நாடுகளும் முறையே சியர் லியோன் (Sierra Leone) (175), நைகர் (174), வேக்கினா பாசோ, மாலி, புறூண்டி, மொசாம்பிக், எதியோப்பியா, மத்திய ஆபிரிக்கா, கொங்கோ மற்றும் கின்னியா-பீசோ (165)




நோர்வே

வடஐரோப்பாவின் மேற்குப்பாகத்தில் ஸ்கன்டினேவிய பெனின்சுலாவில் அமைந்த வளமான நாடு நோர்வே. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து நோர்வே பல அரசுகளால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் நோர்வே ஒன்றாக்கப்பட்டது. 1397இற்குப் பின்னர் பலகாலம், டென்மார்க், சுவீடனால் ஆட்சி செய்யப்பட்டது.

ஒக்ரோபர் 26, 1905இல் சுவீடனிடமிருந்து நோர்வேக்கு பூரண சுதந்திரம் கிடைத்தது. இப்பொழுது Oslo தலைநகரமாக விளங்கிறது. இதன் சனத்தொகை 4,330,951 (4.3 Million) (July 1995) ஆகும். கனடாவுடன் ஒப்பிடும்போது 1/8 பங்காகக் காணப்படுகிறது.)
-பரப்பு; 324,220 சதுரகிலோமீ. நிலப்பரப்பு: 307.860 ச. கி.மீ.
நிலத்தொடர்பாக, பின்லாந்து, சுவீடன், ரஸ்யா காணப்படுகிறது.
இங்குவாழும் மக்களின் ஆயுட்காலம்: சராசரி 77.61 வருடம்.


Since 1987

**வசந்தா நகை மாளிகை**

வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!

TEL: 905 848 5151 FAX: 905 848 8502
OPEN 10:30AM - 8:30PM MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA

**Singapore Communication**
Since 1991
We Sell New & Used Cell Phones, Pagers & Accessories For
WE HAVE PRICE PLANS & PHONES TO SUIT YOUR NEEDS.
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

**துரித பணமாற்றுச் சேவை**
வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
**416.267.8221**

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.


**Insurance & Financial Services**
Balan Kanapathi (Agent)
- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
9.00A.M - 9.00P.M
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

# செய்யும் தொழிலில், வெற்றி பெற





மின் அஞ்சல் (Email) பற்றியோ, இணையதளம் (Website) பற்றியோ தெரிந் திருக்காதவர்கள் இன்றைய வர்த்தக உல கில் "படிக்காதவர்களுக்கு" சமம்.

இந்தியாவில் டெல்லியில் பீடாக் கடைக்காரர் ஒருவர் இண்டர்நெட் மூலம் பீடா விற்கிறார். பீடா என்பது சிறப்பு வெற்றிலையில் செய்யப் படுவது. பீடா ரூபாய் 3000க்கும் உள்ளது. அதை வாங்கவும் பலர் அவரின் இணைய தளத்தைப் பயன்படுத்துகிறார்கள். அவரின் விற்பனை பலமடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறுகிறார். இணையதளத்தின் மூலம் உலகைச் சென்றடையலாம் என்று திரும்பத் திரும்பத் கேள்விப்பட்டிருக்கலாம். அதை மறந்து விடுங்கள். உங்கள் வாடிக்கை யாளருக்கான சேவையை நீங்கள் சிறப்பான- தாகவும் எளிதானதாகவும் ஆக்க இணைய தளத்தை உபயோகிக்கலாம். டெல்லி பீடாக் கடை கதை உங்களைக் கவர வில்லையா? அப்படியானால் இதோ மற்றும் ஒரு உண்மைக் கதை.

கலிபோர்ணியாவில் 1999 வரை மாஸ்டர் டெயிலர் ஜோ ஹேமராஜினி தன்னுடைய ரெடிமேட் ஆடைகளை, வாடிக்கையாளர் களை நேரடியாக சந்திப்பதன் மூலமும், தபால்மூலமும் பெறப்பட்ட ஓடர் களைப் பூர்த்தி செய்வதன் மூலமுமே விற்பனை செய்து வந்தார்.

## பெரி. முத்துராமன்

தன்னுடைய வாடிக்கையாளர்களில் மிகப் பலர் இணைய தளத்தை உபயோகிப் பவர்களாய் இருப்பதை அறிந்து கொண்ட வுடன் அவரும் Mytailor.com என்று ஒரு இணையதளத்தை ஆரம்பித்தார். வாடிக்கை யாளர்கள் இப்போது இணைய தளத்தின் மூலமாக இவருடன் வியாபாரம் செய்கிறார்கள். வியாபாரம் பலமடங்கு அதிகரித்துள்ளதாக கூறுகிறார். இணைய தளத்தின் மூலம் முழுமையான, தொழில் திறம் வாய்ந்த, வாடிக்கையாளர்களுக்கு முழுத்திருப்தி அளிக்கும் சேவையை செய்ய முடிகின்றது என்கிறார் ஹேமராஜினி. அதேசமயத்தில் அவருடைய வாடிக்கை யாளர்களுடனான நேரடித் தொடர்பை முற்றிலும் ஒருநாளும் இண்டர்நெட் நீக்க முடியாது என்கிறார். இண்டர்நெட் மூலமே இப்போது ஒருவர் தன்னுடைய அளவையும், பணத்தையும் ஹேமராஜினிக்குக் கொடுத்து விட முடியும். எத்தகைய உடை என்ன கலர் என்ன போன்ற விபரங்கள் இணைய தளத்தில் இருக்கும். மீண்டும் ஒருமுறை பழைய வாடிக்கையாளர் ஓர்டர் செய்ய விரும்பினால், அவருடைய 'சைஸ்' விபரங்களை மீண்டும் கொடுக்கத் தேவை யில்லை. வாடிக்கையாளரின் முன்பே பெறப் பட்ட அளவு விபரங்கள் பாதுகாக்கப் பட்டிருக்கும். அந்த விபரங்களைப் பயன் படுத்தி புதிய ஓர்டர் பூர்த்தி செய்யப்படும். இதில் வேடிக்கை என்ன வென்றால் ஹேமராஜினியின் பல ரெயிலர்கள் ஹொங்கொங்கில் இருக்கிறார்கள் என்பது தான். இணைய தளம் அமெரிக்காவில் உள்ளது. ஐரோப்பாவில் இருந்து ஒரு வாடிக்கையாளர் ஓர்டர் செய்தால், அந்த ஓர்டர் பூர்த்தி செய்யப்பட்டவுடன் நேரடியாக ஹொங்கொங்கிலிருந்து ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டு விடப்படுகின்றது.

இணைய தளத்தை பெரும்பாலோர் பொதுவாக எதற்குப் பயன்படுத்துகிறார்கள்.
* செய்திகளைத் தெரிந்து கொள்ள
* மற்றவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள
* களிப்பூட்டும் நிகழ்ச்சிகளைக் காண
* வியாபரப் பொருட்களை வாங்க

அப்படியானால் உங்கள் தொழிலுக்கு என ஒரு இணையதளத்தை நீங்கள் ஆரம்பிக்கும் போது மேற்குறித்த விபரங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

இணைய தளம் உருவாக்கும் போது பலரும் செய்யும் பிழைகள்:-
* தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, மின்அஞ்சல், தொலைபேசி எண் போன்றவற்றை வாடிக்கையாளருக்கு எளிதில் தெரியும்படி வைக்காமல் இருப்பது.
* தன்னைப்பற்றிய விபரங்களையே மிகுதி யாக முன்பக்கத்தில் வைப்பது. (30 விநாடிகளில் உங்கள் இணையதளத்தில் மேலும் இருப்பதா வேண்டாமா என்று வாடிக்கையாளர் தீர்மானிக்கிறார். அப்படி யானால் அந்த 30 விநாடிகளுக்கு 'தனக்கு என்ன நன்மை அல்லது லாபம்' என்பதைப் பார்வருக்கு உங்கள் இணைய தளம் விளங்க வைக்குமா?)

* ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத் திற்குச் செல்வது என்பது எளிதாக இல்லாமல் இருப்பது.
* நிறைய செய்திகளைக் குறைந்த இடத்தில் திணிப்பது.
* இணையதளம் பூர்த்தியாகாமல் அல்லது திருத்தப்படாமல் இருப்பது.
* வாடிக்கையாளர்கள் தொடர்பு கொள்ள வாய்ப்பு அளிக்காமல் இருப்பது.
* விற்பனையைப் பற்றிய செய்தி இல்லாமல் இருப்பது, நீங்கள் வாங்கச் சொல்லி கேட்கவில்லையானால் உங்கள் பொருள் அல்லது சேவையை யார் வாங்குவார்கள்?

உங்கள் இணைய தளத்தை உருவாக்கும் போது நினைவில் கொள்ள வேண்டியவை:
* வாடிக்கையாளர் விரும்பக் கூடிய அமைப்பு.
* எளிய சொற்கள்; எளிய வாக்கியங்கள், யாருக்கும் எளிதில் புரியக் கூடிய அமைப்பு.
* பயன்தரும் பல செய்திகள்.
* இலவசமாக என்ன கொடுக்கிறீர்கள்? உதாரணமாக தள்ளுபடி கொடுக்கலாம் அல்லது பயன் தரும் ஒரு ரிப்போர்ட்டை இலவசமாகத் தரலாம். அதற்குப் பதிலாக மின்அஞ்சல் முகவரியைப் பெறலாம்.
* உங்கள் இணையதளத்தைப் பயன்தரும் வகையில் மற்ற உங்கள் தொழில் சம்மந்தப்பட்ட இணைய தளங்களுடன் இணைக்க முடியுமா என்று ஆராய்தல். இத்தகைய முயற்ச்சி இரு இணைய தளங்களுக்கும் நன்மையைத் தரலாம்; ஒரு இணையதளத்துக்கு வருபவர் மற்றொரு இணைய தளத்துக்கும் வரவாய்ப்பு உள்ளது.
* உங்கள் பொருட்கள் அல்லது சேவையை யாருக்கு விற்பனைசெய்ய விரும்புகிறீர்கள்? உங்கள் இணைய தளம் அத்தகை யவர்களைக் கவரக்கூடியதாக உள்ளதா?
* உங்கள் பொருட்கள் அல்லது சேவையின் தனித் தன்மையையும், வாடிக்கை யாளருக்கும், கிடைக்கக்கூடிய நன்மை யையும் இணையதளம் தெளிவாக்கு கின்றதா?

கடைசியாக ஒன்று : எதற்காக இணையதளம் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் ஒரு நோக்கம் வேண்டும். அந்த நோக்கம் நிறை வேறுகிறதா என்று ஒவ்வொரு அசைவிலும் பார்க்க வேண்டும் இல்லையேல் உங்கள் பொருளும், காலமும்தான் வீணாகும்.

உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி பெற்றவரா? உங்கள் வெற்றி மேலும் பலருக்கு முன் உதாரணமாக அமையலாம். உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நாங்கள் விரும்புகிறோம். சொல்ல நீங்கள் தயாரா? அப்படியானால் இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.

பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businesslime மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.
முற்றாக ஒழிக்க அழையுங்கள்.





- No Spraying
- No Smelling
- No Moving



Call: Kanthan Tel: 416-283-9538



# SAFETY TRUCKS
## Training School Ltd.

Training & Trucking

Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




**In Classes**
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**16 Years Canadian Experience with Trucks**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing

* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**

**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




## குப்பிளான் - விக்கினேஸ்வரா மக்கள் மன்றத்தின் கனடா கிளை கோடை கால ஒன்று கூடலும் விளையாட்டு போட்டிகளும்

தாயக மண்ணில் சிற்றூர்களில் ஒன்றான குப்பிளான் கிராமத்தின் கனடா வாழ்மக்கள் …பாவரையும் ஒன்றிணைக்கும் கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளும் வழமை போல இம்முறையும் சிறப்பாக நடைபெறவுள்ளது.
காலம் :- ஆகஸ்ட் மாதம் 16ஆம்திகதி சனிக்கிழமை(16/08/2003)
இடம் :- ஸ்காபரோ "மோர்னிங்சையிட் பூங்கா மைதானம்"

விளையாட்டுபோட்டி நிகழ்ச்சிகள் யாவும் காலை 9.00 மணிக்கே ஆரம்பிக்கபட இருப்பதால் குப்பிளான் கிராமத்தினைச் சேர்ந்த சிறுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை காலதாமதம் இல்லாது தோற்றி தங்கள் பெயர்களை விளையாட்டு போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். மேலதிகவிபரங்கட்கு: 416-497-8247 / 416-321-0999

## இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னாள் ஊழியர் சங்கம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் யூலை மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை நெல்சன் பூங்காவில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| தலைவர் - | T. ஸ்ரீ கிருஷ்ணராசா | உபதலைவர் - | S. பாலசுப்பிரமணியம் |
| செயலாளர் - | S. தருமராசா | உபசெயலாளர் - | S. சர்வானந்தன் |
| பொருளாளர் - | T. நவரத்தினம் | கணக்காய்வாளர் - | T. இரத்தினசிங்கம் |

நிர்வாகசபை உறுப்பினர்:

1. T. கணேசதாசன்
2. K சுகுணபாலயோகன்
3. V. திருநாவுக்கரசு
4. K சுப்பிரமணியம்
5. M வசந்தகுமார்
6. S P மணியம்
7. T. செல்லத்துரை
8. P சிதம்பரப்பிள்ளை

## வருடாந்த வெளிக்கள விருந்து ஒன்றுகூடல்

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளையால் நடத்தப்படும் வருடாந்த வெளிக்களவிருந்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பேர்ச்மவுண்ட் வீதி, மக்னிக்கல் அவனியூ சந்திப்பிற்கு அருகாமையிலுள்ள "லெமொறெக்ஸ் பூங்கா" (L'amoreaux Park" ல் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். முழுநாள் நிகழ்வான இவ்வைபவத்தில் கேளிக்கைகள், விளையாட்டுப்போட்டிகள் மதியபோசனம், விருந்துபசாரம், போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம், வருடாந்த பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கலும் இடம் பெறும். கல்லூரியின் பழையமாணவர்கள், அவர்களின் வாரிசுகள் அனைவரும் தவறாது பங்குகொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

இவ்வண்ணம் செயற்குழுவின் சார்பாக
யோ. தவலிங்கம் - 416-267-0408
என். துரைசிங்கம் - 416-292-5207
ஏ. ஜெயராஜா - 905-947-1934
திருமதி. க. சுந்தர் - 416-286-1662எ
திருமதி. ஜெயா பரராஜசிங்கம் - 416-299-5083
எஸ். சுப்பிரமணியம் -416-269-1173
என். சிவக்குமார் - 416-283-1439
வெ. ராஜகுலேந்திரன் - 416-286-9330
ஸ். புவனேந்திரன் - 416-418-8586
K. R. M. விஜயகுமார் - 647-290-9784

### சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவ ஆசிரியர் சங்கத்தின் கனடா ஒன்று கூடலும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவ ஆசிரியர் சங்கத்தின் கோடைகால ஒன்று கூடல் வருகிற ஒகஸ்ட்மாதம் 16ஆம் திகதி (August 16th 2003) சனிக்கிழமை காலை 10மணி தொடக்கம் மாலை 6மணிவரை மோனிங் சைட் பூங்காவில் பகுதிகள் (மூன்றிலும் & நான்கிலும்) (Morningside park Units 3 & 4) வழமை போல் நடைபெறவுள்ளது.

… வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு போட்டிகளும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெறும். …திய நிர்வாகசபைத் தெரிவு பகல் 12 மணிக்கும் 1 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெறும். சகல பழைய மாணவர்கள் / ஆசிரியர்கள் தத்தம் குடும்பத்துடன் வருகைதந்து ஒன்று கூடலை சிறப்பித்து மதிய போசன உணவிலும், மாலை B.B. Q., தேநீர் விருந்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். வருகை தருபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்
திரு. நல்லையா ரவீந்திரன் 416-754-2195 திரு. ரேஜி தவரத்தினம் 416-446-2965

## கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை பழைய மாணவர் சங்கம் விடுக்கும் அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலை, மற்றும் மக்களுக்கான ஏனைய கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் பழைய மாணவ, மாணவிகள் மற்றும் நலன் விரும்பிகள் ஓர் அமைப்பின் ஊடாக ஒன்றிணையவுள்ளனர். இவ்வமைப்பினது முதலாவது கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு மார்க்கம் & லோறன்ஸ் சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Ceder Brook பூங்காவில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் பழைய மாணவ, மாணவிகள், நலன் விரும்பிகள் அனைவரும் இவ்வமைப்பில் இணைந்து கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தியில் பங்கெடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

தொடர்புகளுக்கு:
ஜெயா ----------- 416 - 698 - 1675
ஸ்ரீ ---------------------- 416 - 286 - 3499
றெக்ஸ் ------------ 416 - 289 - 0828
பிரபாகரன் -----------416- 934 - 0570
விவேகானந்தன் -------416 - 266 - 2716

## உலகத்தமிழர் இயக்க செஞ்சோலை - கனடா தமிழ்ச் சிறார் வட்டம் விடுக்கும் அறிவித்தல்

செஞ்சோலை தமிழ்ச் சிறார் வட்டத்தினால் நடத்தப்படவிருக்கும் தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், பொதுஅறிவு, ஓவியப்போட்டிகள் - 2003க்கான விண்ணப்ப முடிவு திகதி அனேக பெற்றோர்களினதும், நலன் விரும்பிகளினதும் வேண்டுகோளுக்கிணங்க மேலும் நீடிக்கப்பட்டுள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் பரீட்சைத் திகதியும் பின் போடப்பட்டுள்ளது.
விண்ணப்ப முடிவு திகதி:- செப்ரெம்பர் 07/2003 பரீட்சைத் திகதி :- செப்ரெம்பர் 20/2003
மேற்குறிப்பிடப்பட்ட திகதிகள் மேலும் நீடிக்கப்படமாட்டாதாகையால் இதுவரை விண்ணப்பங்களைக் கையளிக்காதவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உடனடியாகத் தங்கள் விண்ணப்பங்களைக் கையளிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.
தொடர்புகட்கு: 39 Cosentino Drive, Scarborough - Ont, M1P 3A3
Phone: 416-335-0622
உலகத்தமிழர் இயக்க செஞ்சோலை (கனடா)
தமிழ்ச்சிறார் வட்டம்

## யோக சத்யம்

அன்பானவர்களே!

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று". எம் சூழலில் அமைந்திருக்கும் அனைத்து ஆலயங்களிலும் தற்போதைய திருவிழாக் கோலங்களைத் தரிசித்து, இறைவனை வணங்கி அருள்பெற்றிடுவதுடன் எம் இளைய தலைமுறையினரையும் அழைத்துச் சென்று ஆலயதரிசனத்தை செய்துவர வழிநடத்தப்படவேண்டும். அத்துடன் தியானம், யோகம், பிராணாயாமம் பயில ஆரம்பிப்பது உங்கள் வாழ்வில் நிச்சயம் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமையும் என்பது என் அநுபவத்தில் நான் கண்டறிந்த உண்மை. 1984 ஆம் ஆண்டில் மகேஷ்யோகியின் அமெரிக்கச் சீடர்கள் என் வீட்டில் தங்கியிருந்து தான், ஆழ்நிலைத் தியானத்தை யாழ். நகரெங்கும் கற்பித்தார்கள். பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் ஒளித்தியான முறையும் என்னைக் கவர்ந்திடவே ஒரு தனிப் பாணியில் எனது தியான அநுபவம் வளர்ச்சியடைந்து. பின்னர் 2000 ஆண்டில் கனடாவில் திருமதி. யோகம் ஆனந்தசங்கரி (905 201 1450) யின் குரு ஸ்ரீ வாசுதேவாவின் குணப்படுத்தும் தியான முறையும் என்னை ஈர்த்தது. 2002 இல் யோகி சத்யம் கற்பிக்கும் கிரியா யோகப்பயிற்றி தியானம் எலும்பு வியாதியால் வளைந்த எனது முதுகை நிமிர்த்தி, எனக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தந்திருக்கின்றது. இந்திய யோகி சத்யம் ஜூலை 28ஆம் திகதி முதல் செப்டெம்பர் 21ஆம் திகதி வரை ஒன்ராறியோவில் பல இடங்களில் தனது இலவச கிரியாயோக பயிற்சி தியான வகுப்புகளை நடத்துகிறார். பாபா திரைப்படத்தில் வந்த சிரஞ்சீவி பாபாஜியின் சீடராகிய அமரர் பரமஹம் யோகானந்தரின் சீடர் இந்த யோகிசத்யம்.
www.kriyayoga-yogisatyam.org / தொலைபேசி: கோபால் சிங் 416-281 9000,
திருமதி. பட்டேல் 905-475-9376


**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**



# அன்புத் தமிழ்

## சிறுகதை வளர்ச்சி ஒரு கண்ணோட்டம்

சிறுகதை என்றால் என்ன என்று தெரியாமலே கனடாவிலும் பிற புலம் பெயர்ந்த நாடுகளிலும் பலர் சிறுகதைகள் எழுதும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களைப் பொறுத்த அளவில் கதையை எப்படி வேண்டுமென்றாலும் எழுதலாம். ஆனால் அது சிறிய அளவினதாக இருந்தாற் போதும் என்னும் கருத்துள்ளவர்களாகத் தெரிகிறது. பலரது கதைகள் வரலாற்றுக் கட்டுரைகள் போலவும் சம்பவங்களே இல்லாத சிந்தனை ஓட்டங்கள் போலவும் இலக்கிய நயம் எதுவும் இன்றிக் காணப்படுகின்றன.



சிறுகதையின் தோற்றம் தொன்மை வாய்ந்தது. காலாதி காலமாக புராணக் கதைகள் என்றும் வனதேவதைக் கதைகள் என்றும் நீதிக் கதைகள் என்றும் கிராமியக் கதைகள் என்றும் நொடிக் கதைகள் என்றும் பல விதமான கதைகள் வாய்மொழியாகச் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. எழுத்து வடிவில் எகிப்தியர்கள் கி.மு. 3000 ஆண்டளவில் சிறுகதைகளை ஆக்கத்தொடங்கி விட்டனரெனத் தெரியவருகின்றது. சங்க நூல்களிலும் ஏராளமான சம்பவங்கள் சிறு சிறுகதைகளாகச் சொல்லப்பட்டுள்ளன. விவிலியம் நீதிக் கதைகளுக்குப் பெயர் பெற்றது.

எனினும் மத்திய காலப் பகுதியில வெளியிடப் பெற்ற தெக்காமரன் (The Decameron) கன்ரபெரிக் கதைகள் (The Canterbury Tales) ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளுமே சிறுகதை வரலாற்றில் முன்னோடிப் படைப்புக்கள் எனக் கொள்ளப்பட்டு வருகின்றன. 1349-1353க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் தெக்காமரன் 100 கதைகளைக் கொண்டுள்ளது. தொகுத்தவர் இத்தாலிய எழுத்தாளர் கியோவானி பொக்காச்சியோ (Giovanni Boccaccio) என்பவர். கன்ரபெரிக் கதைகள் (1385-1400) என்னும் தொகுதி 24 கதைகளைக் கொண்டது. ஆங்கிலப் புலவர் ஜெபிரி சோசர் (Geoffery Chaucer) அவர்களால் தொகுக்கப்பெற்றது.

**கவிஞர் வி. கந்தவனம்**

சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் மிகவும் பழைமை வாய்ந்ததெனினும், 1800களிலேயே அதன் தனித்துவத் தன்மை உணரப் படலாயிற்று. பல எழுத்தாளர்கள் சிறுகதையை இலக்கியத்தின் ஒரு தனித்துவ வடிவமாகக் கருதத் தொடங்கினர். அதனை பரந்த அளவில் விமரிசிக்கத் தொடங்கிய வரும் அதற்கு ஒரு இலக்கியம் சார்ந்த வரைவிலக்கணத்தை முதன் முதலில் 1842இல் அளித்தவரும் எட்கா அலன் போ (Edgar Allan Poe) என்ற அமெரிக்க எழுத்தாளராவர்.

சிறுகதை என்பது 'ஒரே முறையில் படித்து முடிக்கத் தக்கதும் தனித்துவமான அல்லது ஒருமுகப் பட்ட ஒரு விளைவை ஏற்படுத்த வல்லதுமான உரைநடை ஆக்கம்' என்று விளக்கினார் எட்கோ அலன் போ. ஒரே முறையில் என்று அவர் சொன்னது அரை மணித்தியாலத்திலிருந்து இரண்டு மணித்தியாலத்துக்கு இடைப்பட்ட கால எல்லையை, அதாவது ஒரே இரையில் இருந்து இந்தக் கால எல்லைக்குட் படித்து முடிக்கக் கூடியதாகக் கதை அமைதல் வேண்டும். அவர் வகுத்த வரைவிலக்கணத்தின் மற்றைய அம்சம் சிறுகதை ஒரு விளைவை (single effect) மட்டும் தருவதாக இருத்தல் வேண்டும் என்பது. பிற விவரங்கள் அனைத்தும் அதற்குத் துணையாக இருக்க வேண்டுமேயன்றி அதனை விஞ்சுவதாக இருத்தல் ஆகாது. (தொடரும்)

## 2வது வருடாந்தக் கணனிச் செயல் முறைப் போட்டி
## (2nd Annual Computer Programming Contest)

தமிழ் மாணவர்களின் கணனித் தொழில் நுட்ப திறமையை ஊக்குவிக்கும் பொருட்டு கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் கனடாவிற்கு கல்வி பயிலும் உயர்தர பாடசாலை மாணவர்களுக்கு (வகுப்பு 10 - 12) இவ்வருடம் மீண்டும் கணனிச் செயல் முறைப் போட்டி ஒன்றை நடத்துகின்றது. இதில் கலந்து கொள்வதற்கு எதுவித கட்டணமும் கிடையாது. இப்போட்டிகளில் ஒரு மாணவர் தனியாகவோ அல்லது இரண்டு மூன்று மாணவர்கள் சேர்ந்து ஒரு குழுவாகவோ பங்குபெறலாம்.

இப்போட்டி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. வர்த்தக நிறுவனங்களில் டிவீடி, வீடியோ வாடகை வியாபாரத்தை நிர்வகிக்கும் கணனி மென்பொருள் (DVD/Video Store Rental Management Software)
2. தட்டு விளையாட்டு (Board Game) ஒன்றினை உருவாக்கும் கணனி மென்பொருள் (Board Game Software).
3. கணனித்தளத்தில் நாட்காட்டியைப் பாவித்துச் செயல் திட்டங்களை உருவாக்கும் கணனி மென்பொருள் (On-line Calendar Application Software).

- முடிவு திகதி செப்ரெம்பர் 07, 2003.
- விண்ணப்பப் பத்திரம் பெறுவதற்கும், பரிசு வழங்கல் கலந்துரையாடல் நிகழ்ச்சி (செப்ரெம்பர் 27, 2003) பற்றிய விபரங்களுக்கும் பின்வரும் மின்னஞ்சல்களில் அல்லது தொலைபேசி இலக்கங்களில் (பி.ப. 7 மணிக்குப் பின்னர்) தொடர்புகொள்ளவும்.

மின்னஞ்சல்: manni_vannan@yahoo.com
theivendirarajahk@hotmail.com
தொலைபேசி: 416 609 1998 416 335 3453
இணையதளம்: asgc.ca






# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION

## தனியார் பாடசாலை

நீண்ட ஓர் இடைவெளிக்குப்பின்பு, கல்வித்தகவல் பகுதியில் பயன்பாடான ஒரு விடயத்தினை இவ்விதழில் சேர்த்துக் கொள்கிறேன்.

இதுவரை காலமும் அமையப்பெற்ற கட்டுரைகள் கனேடிய கல்விமுறையினைப் பற்றியே எழுதப்பட்டிருந்தன. ஆனால் இம் முறைக்குரிய கட்டுரை சற்று வேறுப்பட்ட கல்வித்தகவல்களைக் கொண்டதாக இருக் கிறது.



பல காலங்களாக வெளிநாட்டு மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரி களுக்குமே அனுமதிபெற்று கனடா வந்து கல்வி பயில்கின்றர். தற்சமயம் தனியார் பாடசாலைகளும் இவ்வாறான வெளிநாட்டு மாணவர்களை ஏற்கும் பணியினில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வரிசையில் ஸ்காபரோ நகரில் இயங்கிவரும் "Pronto Data College" தனியார் பாடசாலை ஒன்றுக்கு அண்மையில் சென்று அங்கு கண்டு கேட்டு அறிந்த தகவல்களை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

பல்கலைக்கழகங்களுக்கோ அல்லது கல்லூரிகளுக்கோ அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு குறிப்பாக அதிக கல்வித் தகமையும், பொருளாதார விடயமும் சற்று அதிகமாகவே தேவைப்படுகின்றன. உதாரணத்திற்கு பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதிக்கப்படும் மாணவர் கல்விச் சான்றிதழ் நல்ல தகுதியுடையதாக இருப்ப துடன் சுமார் 10இல் இருந்து 15ஆயிரம் கனேடிய டொலர்கள் ஒரு தவணைக்கு செலுத்த வேண்டியிருக்கிறது.

ஆனால் தனியார் பாடசாலைகளது வருட செலவீனமானது பல்கலைக்கழகத்திற்கோ, கல்லூரிக்கோ தேவைப்படும் தவணைச் செலவீனத்துக்கு அண்ணளவாக இருக்கிறது. இதன் அடிப்படையில் நோக்குகையில் ஒரு தகுதியான மாணவன் இலங்கையில் இருந்து இங்கு கல்வி அடிப்படையில் வருகை தருவது பொருளாதாரச் சிக்கலில் பெரும் பங்கு வகிக்காது என்பதையே குறிப்பிட விரும்புகிறேன்.

"Pronto Data College" தொழில்நுட்பக் கல்லூரியில் பல தமிழ் மாணவர்களை சந்திக்க வாய்ப்புக் கிடைத்ததோடு மட்டு மின்றி அங்கு ஆசிரியராகக் கடமையாற்றும் இலங்கையைச் சேர்ந்த திரு. கிரி என்பவரையும் சந்தித்து உரையாட வாய்ப்புக் கிடைத்தது.

இலங்கையிலிருந்து கனடாவுக்கு வரு வதற்காக பலபேர் பல்வேறு வழிகளை மேற்கொள்கின்றனர். சட்டத்துக்கு விரோத மான முறையிலும், பல இடர்களை சந்திக்கும் வகையிலும், தரகர்களது தொல் லைகளும் என்று ஏகப்பட்ட பிரச்சினைகள். ஆனால் இவ்வாறான தனியார் பாட-சாலைகள் மூலம் மாணவர்களிற்கு இலகுவாக விசா கிடைப்பதுடன், சிக்கனமான பொருளாதார நிலையுடன் சுலபமாக காரியம் நிறைவேறி விடுகிறது. மாணவர்கள் கனடாவிற்கு வருவது மட்டுமன்றி கல்வித் துறையிலும் தங்களை அவர்கள் ஈடுபடுத்திக் கொள்வது பல்வேறு விடயங்களில் சிறப்பானதாகவே இருக்கிறது.

எனவே இதுபோன்ற தனியார் பாடசாலைக-ளை சென்று பார்த்து விடயங்களைத் தெரிந்துகொள்வது பயனுடையதாக இருக்கும்.

"Pronto Data College" கல்லூரியின் பொறுப்பாளர் செல்வி. சாலினியை சந்தித்த போது எமது தமிழ் மாணவர்களுக்கு இக்கல்லூரியின் கல்வித்திட்டத்தின் மூலம் ஒரு சிறந்த பாதை உள்ளது என்பதனை அறியக்கூடியதாக இருந்தது. அத்துடன் செல்வி. சாலினி இது விடயமாக பல தகவல்களைத் தந்ததுடன் மாணவர்களை இலங்கையில் இருந்து வரவழைக்கும் அத்தனை படிகளிலும் ஆலோசனையையும் அதற்கான அனுசரணையையும் அமைத்துக் கொடுக்கிறார்.



இத்தனியார் பாடசாலையின் தலைமைச் செயலகம் வன்கூவரில் பல காலங்களாக இயங்கி வந்ததுடன் மிக அண்மையில் ரொறொண்ரோவில் அதன் கிளையை ஆரம்பித்துள்ளது. Lawrence & Midland சந்திப்பில் இயங்கிவரும் இத்தனியார் பாடசாலையின் பொறுப்பாளர் Shalin Ramji 416 701-0333 என்ற இலக்கத்தில் தொடர்கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். இத்துடன் தகவல்களை www.pronto_data.com எனும் இணையத்திலும் பெறலாம்.

சர்மா (சரவணபவ சர்மா)


தேமதுரம்.COM

இணையத் தளத்தில் ஓர் இணையற்ற சேவை
சாதாரண மக்களுக்கு ஓர் முக்கிய தேவை

- பாடுபட்டு உழைக்கும் பணத்தை ஏன் வாடகை வீடுகளில் வீணாக்கவேண்டும்?
- வீடு வாங்குவது அல்லது விற்பது பற்றி எண்ணுகிறீர்களா?
- முதன் முறையாக தமிழிலும் ஆங்கிலத்திலும் நீங்கள் அறிந்திருக்க வேண்டிய அடிப்படை விடயங்களை இலவசமாக தெரிந்து கொள்ள

தேமதுரம்.com

விற்பனை முகவரை தேடுமுன்,
நீங்கள் நாடவேண்டிய இடம்

themathuram.com



பாதுகாப்பாக உங்கள் பணத்தை
வீடுகளில் முதலீட்டு வாழ்க்கையில்
வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜீ

Home Life GTA

Param. Gnana
Sales Representative

Cell: 416 230 1107 Bus: 416 321 6969 Res: 905 670 9969 (Mississauga)

Find Tips Easy as 1,2,3 In Buying or Selling Your House @ WWW.THEMATHURAM.COM/HOMES




pundit prithipal
astrologer

Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!

Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances

CALL TODAY at 905-678-8932!




Pundit Prithipal
26 Sledman St.
Malton, ON
L4T 1K5

tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

Free Consultation! Call for help today - "I understand your Problems"



ஞானம்ஸ் ஸ்ருடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416 - 750 - 8118

2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough





யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- பலன் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



# நாமும் நமது இல்லமும் 169

வீட்டின் விலையின் ஏற்றம் தொடர்கின்றது. வீட்டுச் சந்தையைப் பற்றிப் பலவிதமான தகவல்கள் வந்துகொண்டிருக்கும் போது விலையில் இதுவரை பெரிதாக இறக்கம் தென்பட வில்லை. ஆனால் இந்த நிலைமை எவ்வளவு காலம் தொடரலாம். இதுவே இன்றைய கேள்வியாகக் காணப்படுகின்றது. இதுவரை Toronto Real Estate Board திரட்டி வைத்திருக்கும் தகவல்களின்படி, ஆண்டு 1989 வீட்டின் விலையில் அதிகூடிய ஆண்டாக் காணப்பட்டது. அதன்பின்னர் விலையில் பாரிய சரிவு ஏற்பட்டது. அனேகமானவர்கள் அந்த விலை இறக்கத்தில் பாதிக்கப்பட்ட வர்கள் என்பதனை அறிந்திருப்பது நல்லது. ஆண்டு 1996 இல் இவ் இறக்கத்திலிருந்து ஏற்றம் ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சி ஏழு வருடங்களாக தொடர்கின்றது. இந்த ஆண்டில் (2003), ஏழு மாதங்கள் மறைந்து விட்டது. இதுவரை வீட்டின் சராசரி விலையில் 5% இற்கு மேலான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் விலையை ஆராயும் போது, சராசரி வீட்டு விலை $292,112 ஆகக் காணப்படுகிறது. கடந்த ஆண்டின் (2002) சராசரி விலை $275,371. அண்மையில் John Talbot என்ற எழுத்தாளர் வீட்டின் விலை எவ்வாறு செல்லலாம் என்பதனை கலிபோர்ணியாவை உதாரணமாக வைத்து எழுதியுள்ளார். (இவர் எழுதிய புத்தகத்தின் பெயர்: The Coming Crash In The Housing Market)

அவரின் விபரிப்பின்படி உதாரணமாக கலிபோர்ணியாவை வைத்து எழுதப்பட்டுள்ளது. அங்கு வீழ்ச்சி வரலாம் என்று எழுதப்பட்டுள்ளது. அதுமட்டு மல்லாமல் உலகின் பல நாடுகளில் இது நடைபெறலாம் என்ற தொனியில் எழுதப்பட்டு ள்ளது.

உதாரணத்திற்கு 1995 இலிருந்து 2002 ஆம் ஆண்டுவரை அமெரிக்காவில் வீட்டின் விலை அதிகரிப்பு 27% ஆகவும் ரொறொன்ரோவில் 19% ஆகவும் காணப்படுகின்றது. இதே காலப்பகுதியில் இலண்டனில் வீட்டின் விலை அதிகரிப்பு 136% ஆகவும் காணப்படு கின்றது.

இந்த வீட்டின் விலை அதிகரிப்பிற்கு முதற் காரணமாக சொல்லக்கூடியது மலிவான அடமான (Mortgage) வட்டி வீதம் ஆகும்.

John Talbot இன் விபரப்படி வட்டிவீதம் அதிகரித்தால் என்ன நிகழலாம், பலர் வீட்டை விட்டு வெளியேற வேண்டி ஏற்படலாம். எனவே வீடு வாங்குபவர்கள் இதனை சிந்தனையில் கொள்வது அவசியம்.

வட்டிவீதம் அதிகரித்தால் இரண்டு நிலைமை கள் ஏற்படும். ஒன்று பலரினால் வீட்டிற்குரிய மாதக் கட்டுப்பணத்தை செலுத்துவது கடினமாக இருக்கும், இரண்டாவதாக புதிதாக வீடு வாங்க வருபவர்களிற்கு மோட்கேஜ் எடுப்பது கடினமாகும். அதாவது நிதி நிறுவனத்தின் அடிப்படை வேண்டுகோளை நிறைவேற்று வது கடினமாகலாம். இதனால் வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கை குறையச் சாத்தியம் உண்டு.

இதனால் விலை இறக்கம் தவிர்க்கப்படாமல் போகலாம். அதாவது விலையில் இறக்கம் ஏற்படும். அதே விவாதத்தில், ரொறொன்ரோவின் வீட்டு நிலைமையை சான் பிரான்சிஸ்கோ (San Francisco) உடன் ஒப்பிட முடியாது. ஆண்டு 2002இன் இறுதியில் அங்கு சராசரி வீட்டு விலை US $530,000 (≈$710,000 CDN). ஆனால் ரொறொன்ரோவின் சராசரி வீட்டு விலை $275,371 ஆகும்.

ஆனால் இரண்டிற்கும் ஒரேவிதமான தொடர்பு இருக்கலாம் என்பதனையும் ஞாபகத்தில் கொள்வது நல்லது.

**ராஜா மகேந்திரன்**

மேலும், இன்னுமொரு விடயம், என்னவென்றால் அமெரிக்க பொருளாதாரத்தின் நிலைமையைவிட கனடிய பொருளாதாரம் நல்ல நிலையில் உள்ளது.

உலகின் பல நாடுகளுடன் ஒப்பிடும் போது கனடிய பொருளாதார நிலைமை சிறந்ததாகக் காணப்படுகின்றது. அத்துடன் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போது கனடிய வீட்டு விலை அவ்வளவு பெரிதாக அதிகரிக்கவில்லை. இருந்தும், ரொறொன்ரோவிலும் விலையில் இறக்கம் ஏற்படலாம் என்பதில் அனேகமான பொருளா தார விற்பனர்கள் ஒருமித்த கொள்கையைக் கொண்டு இருந்தாலும் அந்த விலை இறக் கம் 1989 இலிருந்தது போல் இருக்காது என்பதனையும் கூறுகிறார்கள். இதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. கனடிய பொருளாதார நிலைமை
2. கனடாவிற்கு ஆண்டு தோறும் வரும் மக்களின் எண்ணிக்கை (குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்திற்கு)
3. உடனடியாக பெரியதொரு வட்டிவீத அதிகரிப்பு ஏற்படாது. இதனால் விலை இறக்கம் ஏற்பட்டாலும் 1989 போல் என்று கூறப்படுகிறது?

**CONDO.APT. FOR SALE**
**SOLD $40 மில்லியன்**

அதிகூடிய விலை?

அண்மையில் நியூயோர்க்கில் 8400சதுரஅடி கொண்ட ஒரு அப்பாட்மெண்ட் ஒன்று $40 மில்லியன் அமெரிக்க டொலரிற்கு விற்கப் பட்டுள்ளது. இதுவே புதிய ஆகக் கூடிய விலையாகக் காணப்படுகின்றது.

இதற்கு முந்திய ஆகக் கூடியவிலை (US $36 மில்லியன் ஆகக் காணப்பட்டுள்ளது.


**Raja M. Mahendran,** P. Eng.
Vice President/Sales Rep.
Office - Tel.: (416) 321-6969
Direct: (416) 315-9397
Email: raja@mahendran.ca

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 4.49% |
| Prime rate | 5% |
| Bank rate | 3.25% |

# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் சோதீஸ்
இடம் பெறும்போது




- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.

THIS MONTH SPECIAL

3.8% FINANCING & LEASING
ALL 2003 VEHICLES ARE ON CLEARANCE SALE

**416-704-1179**

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough




கடன்கொடுக்கலாம்! வாங்கலாம்!
Mortgage/loans/line of Credit

- வீடு, வியாபாரம், சுயதொழில் - கடன் பெறலாம்.
- Down Payment ஒரு பிரச்சினையா? தயங்காதீர்கள்.
- 2nd, 3rd மோட்கேஜை - ஒன்றாக்கலாம்.





தொடர்புகளிற்கு:- ஜோஜ் பரந்தாமன்
**416-332-0933**

* வித்தியாசம் அறிய என்னுடனும் தொடர்பு கொள்ளலாம்*.

# J DAYCARE



- மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

**தினசரி நடவடிக்கைகள்** * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு:
Mrs.S.J. சௌந்தரநாயகம்

151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount)

416-502-3033



# விண்வெளி 124

**கனி**


## நட்சத்திரங்கள்

இறந்த நட்சத்திரங்களின் ஒருநிலை வெண்குள்ளர்கள் எனும் White Dwarfs ஆகும். இவற்றை "குளிர்ந்த நட்சத்திரங்கள்" - Cold Stars எனவும் அழைப்பார்கள். திணிவு குறைந்த நட்சத்திரங்களும், நடுத்தர திணிவுடைய நட்சத்திரங்களும் இறந்து "வெண்குள்ளர்கள்" எனும் நட்சத்திரங்களாக. முதன் முதலில் விண்வெளி ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட வெண்குள்ளர் சைரஸ் B (Sirius B) எனும் நட்சத்திரமாகும். இது தனது இணை நட்சத்திரமான சைரஸ் A (Sirius A) இணைபோல் 10,000 மடங்கு பிரகாசம் குறைந்ததாகும். எமது Milky Way Galaxy இல் ஏராளமான வெண்குள்ளர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வெண்குள்ளர்கள் நட்சத்திரங்கள் உண்மையில் நட்சத்திரங்களின் நெருக்கமான வடிவம் (Compact) வடிவமாகும். மிகப்பெரிய திணிவை மிகச்சிறிய கனவளவில் நெருக்கமாகக் கொண்டுள்ளன. அத்துடன் பெருமளவு வெப்பத்தை தம்முள் கொண்டுள்ளன. சாதாரண நட்சத்திரங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வெப்பம் ஆகையினால் ஒப்பீட்டளவில் வைத்து குளிர்ந்த நட்சத்திரங்கள் எனக் கூறுகிறார்கள். சைரஸ் B நட்சத்திரமானது எமது பூமியை விடச் சிறியது. அதன் ஆரை எமது பூமியின் ஆரையின் எண்பது வீதமானது (80%). நமது சூரியனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். எமது சூரியன் ஒரு நட்சத்திரம் (உயிர்ப்புள்ளது) என்பதை மறவாதீர்கள். நமது பூமியைப் போல் 12,000 மடங்கு பெரியது சூரியன். ஆனால் சைரஸ் B நமது பூமியை விடச் சிறியது. மேலும் சைரஸ் Bயின் மேற்பரப்பின் வெப்பநிலை 2,500° k எனக் கணித்துள்ளார்கள். சூரியனின் மேற்பரப்பின் வெப்பநிலை 10,000° k என்பது உங்களுக்குத் தெரிந்ததே. சைரஸ் B என்ற வெண்குள்ளர்கள் நட்சத்திரத்தை ஒத்ததே ஏனைய வெண்குள்ளர் நட்சத்திரங்களும்.

இவ் வெண்குள்ளர் நட்சத்திரங்களும் மற்றைய நட்சத்திரங்கள் போன்றே பெருமளவு சக்தியை அண்டவெளிக்குள் கதிர்வீச்சுக்கள் மூலம் வீசிக் கொண்டுள்ளன. ஆனால் சாதாரண நட்சத்திரங்கள் போன்று சக்தியைப் பிறப்பிக்க முடியாதனவாக உள்ளன. ஏனெனில் இவற்றின் வெப்பநிலையானது மிகவும் குறைவாக இருப்பதால் ஆகும். எனவே அண்டவெளிக்குள் தமது சக்தியை வீசிக் கொண்டு இருப்பதனால் இக் குளிர்ந்த வெண்குள்ளர் நட்சத்திரங்கள் மேலும் மேலும் வெப்பநிலையை இழந்து குளிர்ந்து கொண்டே செல்கின்றன. இறுதியில் இவற்றின் வெப்பநிலை மிகவும் குறைந்தவுடன் இருளடையத் தொடங்கி ஈற்றில் அண்டவெளியில் இருண்ட நட்சத்திரமாகத் தென்படும். இதனை இருண்ட நட்சத்திரம் (Black Dwarf) எனக் கூறுவார்கள். வெண்குள்ளர்கள் மிகவும் சிறிய நட்சத்திரங்கள். ஆதலினால் அவை வெப்பத்தை இழக்கும் வீதமும் மிகச் சிறியதாகவே இருக்கும். எனவே வெண்குள்ளர் நட்சத்திரம் ஒன்று கறுப்புக்குள்ளர் என்ற இருண்ட நட்சத்திரமாக மாறுவதற்கு பல பில்லியன் (Billion) வருடங்கள் எடுக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். நமது மில்கிவே கலக்சியில் ஒரு கறுப்புக்குள்ளரும் இல்லை என்கின்றார்கள். அதாவது ஒரு கறுப்புக்குள்ளர் (Black Dwarf) நட்சத்திரம் உருவாகும் அளவுக்கு எமது மில்கிவே கலக்சி பழமையானது அல்ல என்பது எமது வானவியலாளர்களின் கணிப்பு. அது மாத்திரமல்ல எமது பிரஞ்சத்தில் கூட கறுப்புக்குள்ளர்கள் ஏதும் இல்லை என்பதே விஞ்ஞானிகளின் கூற்று.


வெண்குள்ளர்களுக்கும் சுப்பிரமணியன் சந்திரசேகர் என்ற பெயருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சுப்பிரமணியன் சந்திரசேகர் என்ற ஒப்பற்ற விண்வெளி ஆய்வாளரை உலகுக்கு இனம் காட்டியது இந்த White Dwarf என்ற வெண்குள்ளர்கள் தான். நோபல் பரிசுபெற்ற இந்தத் தமிழ் மகனைக் கௌரவிக்கும் முகமாகவே "சந்திரா" என்ற விண்வெளித் தொலைகாட்டி ஒன்று கலக்சிகளை வானில் நின்று ஆய்வு செய்துகொண்டு வருகின்றது. அடுத்த தடவை சந்திக்கும் போது White Dwart உடன் இணைந்த "சந்திரசேகர் எல்லை" - "Chandrasegar limit" என்றால் என்ன என்பதையும் அதனுடன் இணைந்த சில சுவையான நிகழ்வுகளையும் பார்போம்.


COLOMBO PHOTO STUDIO
DIVISION OF ST. FRANCIS PHOTO
DIGITAL PHOTO STUDIO
WEDDING,
BIRTHDAY,
ARANKETTAM,
BABY PHOTO,
FAMILY PORTRAIT,
PASSPORT, CITIZEN,
PUBERTY CEREMONY,
P.R CARD, ID PHOTO
ETC.........
416 752 4444

"Professional Photo & Videography
All Types of Video & Photographics Work"
Digital Special Effect
From $35.00
DIGITAL VIDEO TRANSFER
FREE FREE FREE
2 - 5 x 7 Studio Portrait
Enlargement Free
(Couple or Family)
With Purchase of any
Passport, Citizen,
Permanent Resident Card,
ID Photo
[Picture Value $20.00]
CEDARFACE PLAZA
2298 Eglinton Ave. East
Unit #6, Lower Level (Basement)
(Birchmount & Eglinton)
SCARBOROUGH

Sales Agents Are Welcome

HOMELIFE/GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite #206, Toronto, ON M1S 3Y3
Office - Tel.: (416) 321-6969 Fax: (416) 321-6963

வீடு, கட்டிடம், நிலம், வியாபாரம் நிறுவனம் விற்க! வாங்க! இவை சம்பந்தமான ஆலோசனைகளுக்கு....


Justin William
416-803-7344


Keth Kethees
416-275-5788


Nel Ketha
416-677-4707


Param G.
416-230-1107


Sasi Selva
416-725-1125


Siva Sharmaa
416-666-5515

Make Real Estate selling your life time career!!

We Provide:
1. Step by step training to become licensed.
2. Continuous educational support.
3. Attractive incentive and bonuses.
4. Personal coaching to reach your goal.

Come & Talk to us!
* Sales Representative, ** Associate Broker


Raja M. Mahendran**
416-315-9397

எமது நிறுவனத்தில் இணைந்து கொள்ள... ராஜா மகேந்திரன் @ 416 315-9397

# விளையாட்டுத் தகவல்கள் - 128



கிரிக்கெட்

<u>ஒரு தின கிரிக்கெட் தரவரிசை</u>

ஒரு தின கிரிக்கெட் ஆட்டங்களுக்கான சர்வ தேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC) தர வரிசையில் இங்கிலாந்து 3வது இடத்துக்கு முன்னேறியது.

கடந்த சனிக்கிழமை முடிவுற்ற நோத்வெஸ்ட் ரோபியில் வென்றதன் மூலம் இங்கிலாந்து முன்னேற்றம் கண்டுள்ளது. உலகக் கிண்ண இறுதிக்கு இந்தியா தகுதி பெற்றாலும், மேற்கிந்தியத் தீவுகளுக்கும், நியூஸிலாந்துக்கும் எதிரான தொடர்களில் தடுமாறியதால் 5வது இடத்திலிருந்து 8வது இடத்துக்கு தள்ளப்பட்டது. 3வது இடத்திலிருந்து பாகிஸ்தான், சமீப காலமாக மோசமாக விளையாடி வருவதால், 7வது இடத்தைப் பிடித்துள்ளது. அவுஸ்திரேலியா 134 புள்ளிகளுடன் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

தரவரிசைப் பட்டியல்:
(நாடு, பெற்றுள்ள புள்ளிகள் வரிசையில்...)
(1) அவுஸ்திரேலியா, 134; (2) தென்ஆபிரிக்கா-118; (3)இங்கிலாந்து-107; (4) மேற்கிந்திய தீவுகள்-106; (5) நியூஸிலாந்து-106; (6) இலங்கை-105; (7) பாகிஸ்தான்-105; (8) இந்தியா-104 (9) சிம்பாவே-63; (10) கென்யா-28; (11) வங்கதேசம்-3.

<u>ஐசிசி டெஸ்ட் தரவரிசை</u>

இலண்டன், ஜுலை 24: சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) இலண்டனில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரவரிசையில் இந்தியா 6வது இடத்திலிருந்து 5வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. 129 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது.

தரவரிசை விபரம்: (நாடு, பெற்றுள்ள புள்ளிகள்)
1. அவுஸ்திரேலியா(129), 2. தென்ஆபிரிக்கா (119), 3. நியூசிலாந்து (107), 4. இங்கிலாந்து (101), 5. இந்தியா (94), 6. இலங்கை (91), 7. பாகிஸ்தான் (90), 8. மேற்கிந்தியத்தீவுகள் (83) 9. ஜிம்பாப்வே (58), 10. வங்கதேசம்


<u>ஓய்வு பெறுகிறார் அலெக் ஸ்டுவர்ட்</u>

(இங்கிலாந்து) தென்ஆப்பிரிக்காவுடனான தற்போதைய டெஸ்ட் தொடருடன் ஓய்வு பெறப் போவதாக இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் அலெக் ஸ்டுவர்ட் (40) செவ்வாய்கிழமை அறிவித்தார். ஸ்டுவர்டின் சொந்த ஊரான ஓவலில் செப்டம்பர் 4 முதல் 8வரை தென்ஆபிரிக்காவுடனான 5வது மற்றும் இறுதி கிரிக்கெட் டெஸ்ட நடைபெறுகிறது. டெஸ்ட் ஆட்டங்களில் கிரஹாம் கூச்சுக்கு (8,900 ஒட்டங்கள்) அடுத்து அதிக ஒட்டங்கள் எடுத்துள்ள 2வது இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை ஸ்டுவர்ட் (8,281 ஒட்டங்கள்) பெற்றுள்ளார். 1990 இல் டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்கத் தொடங்கிய ஸ்டுர்ட், 128 டெஸ்ட்களில் 8,281 ஒட்டங்கள் (15 சதங்கள், 44 அரை சதங்கள், அதிகபட்சம் - 190 ஒட்டங்கள், சராசரி 40.20) குவித்துள்ளார். 249 பந்துகளைப் பிடித்தது டன் 13 ஸ்டம்பிங்கும் செய்துள்ளார். 170 ஒரு தின ஆட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். தென்ஆபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியுடன் ஒரு தின ஆட்டங்களிலிருந்து ஸ்டுவர்ட் ஓய்வு பெற்றார்.


## எஸ். கணேஷ்

<u>கிப்ஸ், ஸ்மித் தென்ஆபிரிக்காவின் நாயகர்களின் சாதனை!</u>

எட்பாஸ்டனில் தொடங்கிய இங்கிலாந்துடனான முதல் கிரிக்கெட் டெஸ்டின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் தென்ஆபிரிக்கா ஒரு விக்கெட் இழப்புக்கு 398 ஒட்டங்கள் குவித்துள்ளது.
ஹெர்ஷல் கிப்ஸ் 236 பந்துகளில் ஒரு சிக்சர், 29 பவுண்டரிகளுடன் 179 ஒட்டங்கள் குவித்து வாகன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். கிப்ஸ், ஸ்மித் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 338 ஒட்டங்கள் எடுத்தனர். கடந்த ஜனவரியில் பாகிஸ்தானுக்கு எதிராக இதே இணை 368 ஒட்டங்கள் குவித்தது. டெஸ்ட் ஆட்டங்களில் 300 ஒட்டங்களுக்கு மேல் 2 வது முறை குவித்த ஒரே இணை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்துக்கு எதிராக முதல் விக்கெட்டுக்கு அதிகபட்ச ஸ்கோர் இதுதான்.



யு.எஸ். ஒபன் டென்னிஸ் போட்டியின் தரவரிசையின் முதலிடத்தை அமெரிக்காவின் ஆந்த்ரே அகஸ்ஸி பெற்றுள்ளார்.
நடப்பு சாம்பியனான பீட் சாம்ப்ராஸ் (Pete Samparas), போட்டியிலிருந்து அதிகார பூர்வமாக விலகியதைத் தொடர்ந்து அகஸ்ஸி முதலிடத்தைப் பிடித்தார். ஜுவான் கார்லோஸ்ஃபெரீரோ (ஸ்பெயின்) 2ஆம் இடத்திலும், ரோஜர்ஃபெடரர்(சுவிட்சர்லாந்து) 3ஆம் இடத்திலும், கார்லோஸ் மோயா (ஸ்பெயின்) 4ஆம் இடத்திலும், லேடன் ஹீவிட்(அவுஸ்திரேலியா) 5ஆம் இடத்திலும் உள்ளனர். இப்போட்டி ஆகஸ்ட் 25 முதல் செப்ரெம்பர் 7வரை நடைபெறுகிறது.







# நன்றி செய்குனர்ப் பிழைத்தோர்க்கு உய்வில்லை

மாதந்தோறும் நாம் கொண்டாடும் விழாக்களும் பண்டிகைகளும் நம்மைப் படைத்து பற்பல உதவிகளைச் செய்து காத்து அருள் சுரக்கும் பரம் பொருளுக்கு நாம் தெரிவிக்கும் நன்றிக்கடனாக அவை இருக்கின்றன. நன்றிக்கடன் செலுத்துவது மனிதர்களுடைய தலையாய கடமையாகும். ஏனெனில் நன்றி உணர்வு இல்லையெனில் இவ்வுலகமே இயங்கமுடியாது, வாழ்வு செம்மையுறாது. மனித சமுதாயத்தை ஒரு கட்டுக்கோப்புக்குள் இணைத்து இனிது இயங்கச்செய்யும் பிணைப்புக்கயிறு நன்றி உணர்வு எனலாம். நன்றி கொன்ற மகர்க்கு உய்வில்லை என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவர் ஒவ்வொருவருக்கும் எல்லோரும் ஒருவருக்கும் உதவும்போது பூலோகம் சுவர்க்கமாகி விடும். அஃறிணைப் பொருட்களே நன்றி உணர்வினை வெளிக்காட்டி மனிதனுக்கு அறிவுறுத்தும் போது மனிதன் நன்றியை வெளிப்படுத்தும் கடப்பாடு உடையவன் என்பது தெளிவு.

காரணம் இன்றிச் செய்யும் உதவி, உரிய நேரத்தில் செய்யும் உதவி, பிரதிபலனை எதிர்பாராமல் செய்யும் உதவி, சார்புடை யோருக்குச் செய்யும் உதவி என உதவிகள் பல வகைப்படும். நாம் எவ்வித உதவியையும் செய்யாத போதிலும், நம்மிட மிருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்காமல் ஒருவர் நமக்கு உதவி செய்கின்றார் என்றால் அத்தகைய உதவிக்கு எதுவும் ஈடாகாது என்பர் வள்ளுவர் வாக்கு.

*செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது. (குறள் 101)*

ஒருவருக்கு உதவி தேவைப்படும் காலத்தில் அதாவது ஆபத்து நேரிடும் போது முன்வந்து உதவுவது ஞாலத்திலும் பெரியது என்றார் ஔவையார். எனவே தக்க நேரத்தில் செய்த நன்றி சிறியதாயினும் அது இந்த உலகத்தைப் விடப்பெரியது. ஆடை அவிழும் போது கை வேகமாகச்சென்று அதனைப் பற்றிக் கொள்வதனைப் போன்று உதவி தேவைப்படும் நேரத்தில் உதவுவது பெரிய செயலாகும்.

*காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது. (குறள் 102)*

எவ்வித பயனையும் எதிர்பாராது, பிரதிபலன் கருதாமல் ஒருவர் மற்றவருக்குச் செய்கின்ற உதவியானது பரந்த கடலை விட மாணப் பெரிதாகும்.

**நா. க. சிவராமலிங்கம்**

*பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலின் பெரிது. (குறள் 103)*

பெரியோர்க்குச் செய்யப்படும் உதவி தினையளவு சிறிதாயினும் அதனைப் பனை யளவு பெரிதாக அவர் அதனை மதித்துப் போற்றுவர்.

*தினைத்துணை நன்றி செயினும்*
*பனைத்துணையாகக்*
*கொள்வர் பயன்தெரி வார். குறள் 104*

ஆகியவற்றைப் பொறுத்து உதவியின் தன்மை நிர்ணயிக்கப்படும். அற்பனுக்கு பேருதவி செய்தாலும் அதன் பெருமையை அவன் உணரமாட்டான். அற்பமான உதவி பெரியோர்களுக்குச் செய்யப்படுமாயின் அது பெருமை பெறும். (தொடரும்)


ஸ்காபரோ சென்ரினறி வைத்தியசாலைக்கு நிதி சேகரிக்கும் பொருட்டு
கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் வருடா வருடம் நடத்தும்

## கார் கழுவி நிதி சேகரிக்கும் நிகழ்ச்சி

(Fund Raising Car Wash)

திகதி: ஆகஸ்ட் 9, 2003, சனிக்கிழமை
நேரம்: காலை 10மணி முதல் மாலை 4 மணிவரை
இடம்: நெல்ஸன் & எல்ஸ்மியர் சந்திக்கு வடகிழக்கில் உள்ள Foodbasics
கார்கள் தரிப்பிடம் (2900 எல்ஸ்மியர் வீதி) (சென்ரினறி வைத்தியசாலைக்கு எதிரில்)

கடந்த மூன்று வருடங்களும் தமிழ் மக்கள் தந்த ஆதரவிற்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வருடமும் உங்கள் கார்களைக் கொண்டு வந்து கழுவி உங்கள் ஆதரவைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். உதவி செய்யும் மாணவர்களுக்கு தொண்டர் சேவைக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்துடன் வடகிழக்கு ஈழத்தில் உள்ள பல்கலைக்கழகங்களிற்கு அனுப்புவதற்காக 5 வருடங்களிற்குள் பாவித்த புத்தகங்களையும் சேகரிக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு: asgc.ca manni_vannan@yahoo.com
சி. இராமநாதன் 416 438 2949 (பி.ப. 6மணிக்குப் பின்னர்)
சுரேன் பாலேந்திரன் 416 471 4145 ( ")
அ. இராஜரத்தினம் 416 267 8390 (" )



தமிழர் நிர்வாகத்தில் ஒரு **EMBASSY**

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம்

**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**



Finch / Middlefield 5200 Finch Ave., Scarborough **416-332-8451**



# New Kalyani Catering & Take out

292 Markham Road, Scarborough, Ontario
**416-261-9774**



நியூ கல்யாணி தனது 9 ஆவது வருடத்தை முன்னிட்டு வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை May 15th, 2003 தொடக்கம்...

<u>வாரத்தில் ஏழு நாட்களும்</u>

**Lunch Special**

| | |
|---|---|
| Madras chicken Buriyani | $3.99 |
| Jaffna Buriyani | $4.99 |

**Dinner Special**

| | |
|---|---|
| Megoring Noodles Chicken *(Malasiyan Style)* | $3.99 |

<u>சனிமுதல் - ஞாயிறு வரை</u>

**Lunch Special**

*முத்துச்சம்பா 10 பதார்த்தங்களுடன் வாழையிலையில்*


**Dinner Special**

*கொத்து ரொட்டி(கோழி, ஆடு, மாடு)*

வாரத்தில் ஏழு நாட்களும்

**இடியப்பம் 6¢**

500க்கு மேல் கொள்வனவு செய்தால் 5¢
ரொட்டி (பறோட்டா) 50¢
100க்கு மேல் கொள்வனவு செய்தால் 40¢



<u>ஒவ்வொரு திங்கள் முதல் - புதன் வரை Lunch Special</u>

Vegitable Thali $2.99

*<u>Dinner Special</u>*

Singapore Noodles $2.99

<u>ஒவ்வொரு வியாழன் முதல் - வெள்ளி வரை</u>

<u>Lunch Special</u>

விரதச் சாப்பாடு 10 பதார்த்தங்களும் வழங்கப்படும் $3.99

*<u>Dinner Special</u>*

| | |
|---|---|
| மசாலா தோசை | $2.49 |
| Plan தோசை | $1.99 |
| 5 இட்லி | $1.99 |

(சாம்பார், சட்னி இலவசம்)

**சனி, ஞாயிறு- தீவக மக்களின் முறைப்படி விஷேசமாக தயாரிக்கப்படும் கூழ் $3.99**

எந்த நேரத்திலும் எவ்வளவு ஆனாலும் ஓடராக செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் (Ceylon Bakery பாண் வகைகள், Cake வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து சிற்றுண்டி வகைகளும் மலிவு விலையில் செய்து தரப்படும். எந்த விதமான கொண்டாட்டங்களானாலும் மலிவு விலைகளில் Catering செய்து தரப்படும்.



# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

இதுவரை நாம் ஒவ்வொருநாளும் எம்மைப் படைத்த இறைவனை மனதார வணங்கிப் போற்றி அவரின் அருளுக்கும் வழிநடத்தலிற்கும் நன்றி தெரிவித்து பிரார்த்தனை, தியானம் மூலம் அவருடன் தொடர்புகொள்வது இன்ப வாழ்விற்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பதைப் பார்த்தோம்.

இறைவனின் நாமஸ்மரணம், பஜனை, பிரார்த்தனை, வழிபாடு, தியானம் போன்றவை, எமது ஆத்மஸ்வரூபத்தை வெளிப் படுத்தி, எம்முள் ஆண்டவனின் சக்தியையும் சாரத்தையும் நிரப்ப உதவுகின்றன என்பது காலங்காலமாக அநுபவம் கண்டறிந்த உண்மை. இறைவன் அருள் தரும் விழிப் புணர்வு, சரியான வாழ்க்கைப் பாதையில் நான் வழிநடக்க, சத்தியமான வார்த்தைக-ளைப் பேச, தார்மீக வாழ்க்கையைக் கடைப் பிடிக்க எனக்குச் சக்தியைத் தருகின்றது. நல்வாழ்விற்கு எனக்கு உதவக்கூடியவற்றை நான் தேர்ந்தெடுக்க, தெரிந்தெடுத்த தீர்மானங்களைக் கடைப்பிடிக்க என்னால் மட்டுந்தான் முடியும்.

**லலிதா புருடி**

அன்பு வாசகரே! வாழ்க்கையில் உனது திட்டம் என்ன? மானிடத்தின் பரிணாமங்களாகிய உனது உடல், உள்ளம், உணர்வு ஆத்மா என்பவற்றைச் சரிவிகித சமானமாக போஷிக்கின்றாயா? சாதாரணமாக யாவரும் தம் உடல் ஆரோக்கியத்தில், ஏன் பலர் தம் உள்ளம், உணர்வு நலத்திலும் கவனமெடுப்பது சர்வசகஜம். ஆனால் வாழ்வில் உனது ஆன்மீகத்திட்டம் என்ன? எதை நோக்கி உன் ஆன்மீகப் பிரயாணத்தை செய்கின்றாய்? நீ எங்கு போக விரும்பு கின்றாய் என்பது உனக்குத் தெரியுமா? அங்கு போக வழி தெரியுமா? அந்த ஆன்மீகப் பயணத்தில் வெற்றிகரமாக முன்னேறிட அத்தியாவசியமான ஆற்றலும் சகிப்புத்தன்மையும் உன்னிடம் இருக் கின்றதா? ஆன்மீக சக்தி இல்லாமல் உன்னால் வாழ்க்கையில் வெற்றி அடைய முடியாது என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீக சக்தி என்றால் என்ன? எவ்வாறு அதை அடையலாம்? பாதுகாக்கலாம்? வளர்க்கலாம்? கடைசியாக, இக்கேள்வி களுள் ஒன்றையாயினும் நீ எப்போதாவது உன்னிடமே கேட்டுக்கொண்டாயா? இக் கேள்வி களுக்கு பதிலளிக்காமல் எப்படி நீ உனது ஆன்மீக முன்னேற்றத்தைப் பற்றித் திட்டமிடுவாய்? நீ உனக்குள் எதை அநுபவிக்க விரும்புகின்றாயோ அதை அடைய உதவுவது தான் உன் ஆன்மீகத் திட்டம் என்பது. உன் ஆன்மீகத் திட்டம் நிறைவேறிட நீ என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக நிச்சயம் செய்து கொள். ஆன்மீகத் திட்டம் என்றால் வழிபாடு, பிரார்த்தனை; தியானம் செய்வது மட்டும் இல்லை. உன் ஆன்மீகச் செயற் பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் இதற்குள் அடங்கும். உனது ஆன்மீகக் குறிக் கோளை அடைய நீ எதைச் செய்வாய், எதைச் செய்யமாட்டாய், உன்னால் எதைச் செய்ய முடியும். எதைச்செய்ய முடியாது என்பவற்றை அலசி நிர்ணயிப்பது சீக்கிரம் உனது ஆன்மீகக் குறிக்கோளையடைய உனக்கு உதவும்.



உண்மையான சுய அலசல், வாழ்க்கைப்பாதையில் நீ இப்போ எங்கே இருக்கின்றாய்? இங்கே எப்படி வந்தாய்? நீ இப்போ தரித்திருக்கும் இடத்திலேயே தான் தொடர்ந்தும் இருக்க விரும்புகின்றாயா? நீ இப்போதிருக்கும் இடம் உனக்குப் பிடிக்காவிட்டால் எதை எதை விலக்கினால், எதை எதை மாற்றினால், வெற்றிப்பாதையில் நீ முன்னேறலாம் என்பவற்றை தேர்ந்தெடுத்துச் செயற்படு. இப்பரிசோதனைகளை உனது நன்மைக்காக, உன்னுடனே, நீயே செய்து கொள்ள வேண்டும். உன் சிந்தனைகளை அவ்வப்போது எழுதிக்கொள்வது சிலாக்கியம். அது உனக்கு மிகவும் ஒத்தாசையாக இருக்கும்.

இன்றுவரை, நீ, "ஆம், நான் ஆத்மார்த்தமாக தார்மீகமாக வாழ்கின்றேன். நான் நேர்மை, நாணயம், அன்பு யாவும் நிறைந்தவள். என் ஆன்மீகம் எனக்கு உதவி வழிகாட்டுகின்றது என எண்ணியிருக்கலாம்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON



**கலைமகள் புத்தக நிலையம்**

